**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு M. சந்திரமோகன்., B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆனி திங்கள் 3-ம் நாள்
2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 17-ம் நாள் செவ்வாய்கிழமை
*******

**இடைமனு எண். 2/2024-ல் அசல் வழக்கு எண். 196/2023**

குணசேகரன் .....மனுதாரர்/பிரதிவாதி

...எதிர்...

செல்வராஜ் ......எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 16.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு K.சங்கரன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு G.சுந்தர்ராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக 06.12.2024-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை-9, விதி-7-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர் /வாதி மனுதாரர்/பிரதிவாதி பேரில் பொய்யான விபரங்கள் கண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/பிரதிவாதி மேற்படி வழக்கில் அவரது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி உள்ளார். இந்நிலையில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை

தாக்கல் செய்ய கடந்த 06.12.2024 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. ஆனால் மனுதாரர்/பிரதிவாதிக்கு கடந்த 04.12.2024 முதல் காய்ச்சல் ஏற்பட்டு வீட்டில் படுத்த படுக்கையாக இருந்து நாட்டு வைத்தியம் செய்து கொண்டதால் மனுதாரர்/பிரதிவாதியால் அவரது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றிய விபரம் தெரிந்து கொள்ள இயலாமல் போய்விட்டது. இதன் காரணமாக கடந்த 06.12.2024 அன்று மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய ஆஜரில்லை எனக் கண்டு மனுதாரர்/பிரதிவாதி பெயரில் Exparte உத்தரவு ஏற்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்/பிரதிவாதி வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. எனவே மனுதாரர்/பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மனுதாரர்/பிரதிவாதியின் கட்சியினை கேட்டு அசல் வழக்கை தகுதி அடிப்படையில் விசாரணை செய்து தீர்வு காண வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது. இல்லையேல் மனுதாரர்/பிரதிவாதிக்கு பெருத்த கஷ்ட, நஷ்டமும், ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படும். இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர் /வாதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக் கூடியதில்லை. எனவே அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக 06.12.2024–ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/ பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இந்த மனுவை அதிகபட்ச செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக 06.12.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இந்த மனுவை அதிகபட்ச செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனுவுடன் அசல் வழக்கிற்கான எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், இது விசாரணை நீதிமன்றம் என்பதாலும் தரப்பினர்களுக்கு போதுமான வாய்ப்பு கொடுத்து இருதரப்பு முழுவிசாரணை செய்து அதன் அடிப்படையில் முடிவு காண்பதே நியாயமானதாகவும், இயற்கை நீதியாகும். இருப்பினும், மனுதாரர்/பிரதிவாதியால் மனுவில் சொல்லியுள்ள காரணத்திற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் கீழ்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியில், மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத்தொகையாக ரூ.500/-ஐ (ரூபாய் ஐநூறு மட்டும்) 21.06.2025-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 23.06.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு ஜுன் மாதம் 17-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/- M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |

(ஒம்/- M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.2/2024-ல்
அசல் வழக்கு எண்.196/2023
நாள்.17.06.2025.